செ. கு. எண்: 165

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 30.6.2013

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், அய்யம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி ராதிகா என்பவர் 9.6.2013 அன்று அய்யம்பாளையம் கிராமத்தை ஒட்டிய கருப்பராயன் காடு என்ற வனப்பகுதியில் காட்டு யானையால் தாக்கப்பட்டு சம்பவ இடத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், தாயம்மாபுதூர் கிராமத்தைச் சேர்ந்த திருமதி சென்னம்மாள் என்பவர் 12.6.2013 அன்று தனது வீட்டின் அருகே காட்டு யானையால் தாக்கப்பட்டு சம்பவ இடத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நீலகிரி மாவட்டம், குன்னூர் வட்டம், எடப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த திரு. சுப்பையா என்பவர் 21.6.2013 அன்று அளக்கரை பகுதி அருகே காட்டு எருமையால் தாக்கப்பட்டு பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 22.6.2013 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காட்டு யானை தாக்கியதில் அகால மரணமடைந்த ராதிகா, சென்னம்மாள் மற்றும் காட்டு எருமை தாக்கி அகால மரணமடைந்த சுப்பையா ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்த ராதிகா, சென்னம்மாள் மற்றும் சுப்பையா ஆகியோரின் குடும்பங்களுக்கு வனத் துறை மூலம் தலா மூன்று லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**